12.09.2025
I.D.O.P.No. 06/2020
**எ.ம.சா.1 – ஆல்பினா வினோதினி**

**மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை :-**

எங்கள் திருமணம் பெற்றோர் பார்த்து நடத்திய திருமணம் என்றால் சரிதான். திருமணத்தின்போது சீர்வரிசையை விருப்பப்பட்டு கொடுத்தோம் என்றால் சரியல்ல, அவர்கள் கேட்டு வாங்கினார்கள். வரதட்சணையை கேட்டுதான் கொடுத்தோம் என்று தற்போது சொன்ன விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் எதிருரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணமான இரண்டாவது வாரத்தில் தனிக்குடித்தனம் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். அவ்வாறு தனிக்குடித்தனம் சென்றுவிட்டு வேண்டுமென்றே மனுதாரரின் தாயார் மீது புகார் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்தது என்றால் சரிதான். அறுவை சிகிச்சையின்போது, மனுதாரர் எனக்கு ரத்ததானம் செய்தார் என்றால் தெரியாது. அறுவை சிகிச்சைக்கு பிறகு நான் 15 நாள் ஓய்வில் இருந்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரர் என்னையும் என் தாயாரையும் 10.08.2015 அன்று அடிக்க வந்தார் என்று காவல்துறையில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சிகிச்சை பெற்று ஓய்வில் இருந்த சமயத்தில்கூட மனுதாரரை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக, அவர்மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மீண்டும் தனி வீடு பார்த்து செல்வதற்காக மனுதாரர் வேலை செய்யும் ரயில்வே நிறுவனத்தின் Quarters கேட்டு பெறுவதற்கு மூன்று மாத காலம் அவகாசம் கேட்டார் என்றால் இல்லை. அவர் Quarters பார்த்து என்னை அழைத்தார் என்றாலும், நான் என் பெற்றோர் வீட்டில் இருந்து வர மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. ../

குழந்தை பிறந்த பிறகு, என் தாயார் வீட்டிற்கு சென்ற நான், மீண்டும் மனுதாரருடன் சேர்ந்து இதுவரை வாழவில்லை என்றால் சரிதான். வீட்டு சாமான்களை ஒரு வேனில் ஏற்றி எனக்கு அனுப்பிவைத்தாரா என்றால் தெரியாது. நான் மனுதாரருடன் சேர்ந்துவாழ்வதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் என் பெற்றோருக்கு உதவி செய்யவேண்டும் என்ற காரணத்தினாலும், மனுதாரரை வீட்டு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்மீது பொய்யான காரணங்களை சொல்லி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த காரணத்தினால்தான் மனுதாரர் விவாகரத்து கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் பலமுறை சேர்ந்துவாழ முயற்சி எடுத்தும், நான் சேர்ந்துவாழ வராத காரணத்தினால்தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/– M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.